RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt23115

OPEN ACCESS

# திருத்தொண்டர் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள விவிலியக் கிளைக்கதைகள் தேவசகாயம் பிள்ளையின் வாழ்வில் ஏற்படுத்திய இறைநம்பிக்கை

ப. ரெஜினா [அ, *]

[அ] தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா.

# The biblical sub-stories contained in the Thiruthondar epic are the faith in the life of Devasahayam Pillai

**B. Regina [a, *]**

[a] Department of Tamil, Nirmala College for Women, Coimbatore-641018, Tamil Nadu, India.

* Corresponding Author: jane.regi1964@gmail.com

Received: 19-09-2022
Revised: 30-10-2022
Accepted: 03-11-2022
Published: 03-12-2022

## ABSTRACT

In the stories told in the Bible, it is possible to know how deep and firm the devotion to God was in the lives of the saints. These short stories show that when ordinary simple people live with deep faith in God, God uses them as tools, dwells in them, performs amazing deeds, turns them into extraordinary people, and contributes to the sovereignty of God. Devasagayam Pillai, the main character in this story, was deeply attached to Hinduism before he converted to Christianity. A man of high honor, great wealth, and a great position in the government, he served in a distinguished manner as the king desired. While working with his Catholic friend Dilanoy, Neelkandan's family faced unexpected hardships. At that time, Dilanoy comfortingly mentioned that God blessed many times the lives of those who lived with deep faith in God despite various sufferings in the lives of people in the Old Testament book in the Bible. The story of the life of the People that he heard through Dilanoy instilled deep faith in him. Due to this he lost all his high position and wealth. Accepting Christ as everything to him and embracing Christianity, Devasagayam Pillai willingly accepted all the cruel punishments, humiliations and tortures given to the child and gave his life as a witness to Christ. God has elevated him to a holy position in heaven as a gift.On the 15th of May 2022, the two hundred and seventieth anniversary of the death of Devasakagam Pillai, he was canonized by Pope Francis in Rome. The first Indian-born martyrs and Tamil Nadu's first saint who strictly followed Hindu family Life and became a Christian Saint.

**Keywords:** Devasagayam Pillai, Christian Saint, Bible, Christianity

## முன்னுரை

கிறித்தவர்களின் புனித நூல் திருவிவிலியமாகும். விவிலியம் பல்வேறு காலங்களில் வாழ்ந்த இறையடியார்கள் ஆவியானவரின் துணை கொண்டு எழுதப்பட்டது. உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்புக்குரிய நூலாகும். இக்காப்பியத்தில் விவிலிய நூலான பழைய ஏற்பாட்டில் விசுவாச வாழ்வுக்கு மிகப்பெரிய சாட்சிகளாக இருந்தவர்களைப் பற்றிய விவிலிய கிளைக்கதைகளை டிலனாய் என்ற கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். துன்பத்தில் துவண்டு வழியறியாது இருந்த நீலகண்டப்பிள்ளைக்கு ஆறுதல் தரும் வகையில் எடுத்துரைத்தார். கிளைக்கதைகளைக் கேட்டறிந்த

நீலகண்டனின் வாழ்வில் கடவுளின் மட்டில் அன்பும் நம்பிக்கையும் தோன்றியதால் கிறித்துவ மதத்தை தழுவினார். பெயரளவு கிறித்துவனாக வாழாமல் கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ விரும்பியதால் கிறிஸ்துவின் பொருட்டு அனைத்தையும் இழந்தார். கொடிய மரணத்தின் வழியாக உயிரைக் கொடுத்த தேவசகாயம் பிள்ளையின் இறைநம்பிக்கைக்கு வித்திட்ட கிளைக்கதைகளை இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது.

## திருவிவிலியத்தின் சிறப்பு

திருவிவிலியம் புனித நூல் இரு பிரிவுகளைக் கொண்டது. பழைய ஏற்பாட்டில் நாற்பத்தி ஆறு புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் ஏற்பாட்டில் இருபத்தி ஏழு நூல்களும் உள்ளன. பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. விவிலியம் மனித மீட்பின் வரலாற்றை விளக்கும் நூலாகும்.

## விவிலியத்தில் இடம் பெற்றுள்ள கருத்துகள்

கடவுள் மனிதனுக்குத் தேவையான அத்தனைப் படைப்புக்களையும் படைத்ததோடு அதை ஆண்டு நடத்த மனிதனைப் படைத்தார். கடவுள் கொடுத்த கட்டளையை மனிதன் மீறியதால் கடவுளுக்கு எதிராக பாவம் செய்தான். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கடவுளின் கட்டளையை மீறி மனிதன் தான்தோன்றித்தனமாக வாழ்ந்த போது கடவுள் அந்தந்தக் காலத்தில் இறைவாக்கினர்கள் என்ற இறையடியார்களை அனுப்பி அவர்களைத் திருத்த பன்முறை முயன்றும் பலனில்லாத காரணத்தால் கடவுள் இறுதியாக தன் மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்து மனிதர்களை பாவத்திலிருந்து மீட்பதற்காக தன் மகனை பலியாக்கி உலகினரின் பாவம் போக்கி விண்ணக வாழ்வைப் பெற்றுத் தந்தார்.

## காப்பியத்தில் இடம் பெற்றுள்ள கிளைக்கதைகள்

ஓர் காப்பியம் சிறப்பானதாக அமைய அது பல்வேறு காப்பியக் கூறுகளையும், இலக்கிய உத்திகளையும் கொண்டு இருத்தல் வேண்டும். காப்பியத்தில் பெரிய கதைகளோடு தொடர்புடைய பல கிளைக்கதைகளைக் காண முடிகின்றது. இக்கதைகள் கதைக்கு ஓர் உயிரோட்டத்தை கொடுத்து, படிப்பவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு வாழ்க்கைக்குத் தேவையான பல அறக்கருத்துக்களை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளன.

கிளைக்கதைகள் கதைப்பரப்பினை விரிவுபடுத்துவதோடு கதைக்கு சுவையூட்டும் இயல்பைக் கொண்டவை. கிளைக்கதைகள் பெரும்பாலும் காப்பியங்களில் சிறப்பிடம் பெறுகின்றன. “கிளைக்கதைகளை இடைமிடைந்து அமைத்துக் கொள்ளுவது, காப்பியத்திற்கு ஓர் உயர்வையும் செறிவையும் தருவதோடு காப்பியப் புலவனின் படைப்பாற்றல் திறத்தை விளக்கி நிற்கும்” என்பர் (Duraisamy Pillai, 1941). குழந்தைகள் முதல் முதியவர் வரை விரும்பக்கூடிய ஆற்றல் மிக்க சக்தியாக கதை விளங்குகின்றது.

## கிளைக்கதைகளின் நோக்கங்கள்

காப்பியம் பரந்த கதைக் களத்தை உடையது. கதை வளர்ச்சிக்கு கிளைக்கதைகள் தேவைப்படுகின்றன. காப்பியத்துக்குச் சுவை கூட்டவும், வாழ்வியல் விழுமியங்களை வலியுறுத்தவும் கிளைக்கதைகள் பெரிதும் உதவுகின்றன. வாழ்வியல் வழிகாட்டுதலைக் கொண்ட காப்பியங்களின் நோக்கத்தைக் கிளைக்கதைகள் எளிமையாக்குகின்றன.

## திருத்தொண்டர் காப்பியத்தில் கிளைக்கதைகள்

இக்காப்பியம் இளமைக் காண்டம், தலைமைக்காண்டம், பொறுமைக்காண்டம், இறைமைக்காண்டம் என்ற நான்கு காண்டங்களையும் நாற்பது படலங்களைக் கொண்டுள்ளது. இதில்

கனவுக்காண் படலம், அருள்நீராட்டுப் படலம், இறைமொழிப் படலம், பரிசேயர் படலம், கதைப்பொதி படலம் என்னும் படலங்களிலுள்ள விவிலியக்கதைகள் வாழ்வியலுக்குத் தேவையானயான அறவுரைகளை உணர்த்துகின்றன.

## நம்பிக்கையின் முன்னோடி ஆபிரகாம்

ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் பற்றே நம்பிக்கையாகும். இது மனிதர்களிடையே நிகழ்வது இயல்பானது. இன்பத்தில் கடவுளை புகழ்வதும் போற்றுவதும் மனிதனுக்கு எளிதானக் காரியம். இன்பம் துன்பம் இரண்டையும் சமநிலையோடு ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் கடவுளின் மீது ஆழமான அன்பும், பற்றுமுள்ள மனிதர்களால் மட்டுமே முடியும். அதோடுகூட இறைவன் தன் வாழ்வில் செய்யக்கூடிய அனைத்து செயல்பாடுகளும் நன்மைக்கே என்று நம்புபவர்கள் இறைவன் காட்டும் பாதையில் நடந்து இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுவர். அந்த வகையில் வாழ்ந்தவர் தான் ஆபிரகாம் என்ற எளிய மனிதன். எல்லா சூழ்நிலையிலும் இறைத்திட்டத்திற்கு தன்னை முற்றிலும் அர்பணித்து வாழ்ந்ததால் இவரை ‘விசுவாசத்தின் தந்தை’ என்று அழைக்கிறோம்.

## கடவுளின் அன்புக்குரியவர்

ஆபிரகாம் வாழ்வில் கடவுள் அனுமதித்த அத்தனை சோதனைகளிலும் மனம் தளராமல் எந்தப் புலம்பலுமின்றி இறையன்போடு ஏற்றுக்கொண்டு கடவுளுக்கு முழுமையாக கீழ்ப்படிந்ததால் கடவுள் அவருக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை வழங்கியதைப் பற்றி கவிஞர் இன்னாசி ‘பலியிடு வரலாறு’ என்ற தலைப்பில் அவரின் விசுவாச வாழ்வை எடுத்துரைத்துள்ளார். குழந்தை எவ்வாறு தனது பெற்றோர் மீது முழு நம்பிக்கை வைக்கிறதோ அது போல் கள்ளம் கபடமின்றி இறைவனின் திட்டத்தை முழுமையாக ஏற்று அவரில் நம்பிக்கை வைப்பது தான் விசுவாசமாகும்.

ஆபிரகாம் ‘தெராகு’ என்பவரின் மகன் திருமண வயது வந்த போது ‘சாராள்’ என்ற அழகிய பெண்ணை திருமணம் செய்து வைத்தனர். அவர்களின் இல்லற வாழ்வு இனிதாக இருந்த போதும் அவர்களுக்குள் ஒரு குறை குழந்தைப்பேறு இல்லாத நிலை. இந்த நிலையில் கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழ்ந்தார். ஒருநாள் கடவுள் தன்னுடைய பக்தன் ஆபிரகாமை நோக்கி “உன் மனைவி சாராள் உனக்கு ஒரு புதல்வனைப் பெறுவாள். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடுவாய்” (தொடக்க நூல். 17/19) என்றார். ஆபிரகாமின் மனைவி சாராள் கூடாரத்துக்குள் இருந்த அவள் தமக்குள் சிரித்து, நானோ கிழவி என் தலைவரோ வயது முதிர்ந்தவர் எனக்கா இன்பம் என்று கேட்டதால் அவளுக்குள் நம்பிக்கையில்லாத நிலையை அறிய முடிகின்றது. ஆபிரகாம் கடவுளின் மீது கொண்ட விசுவாசத்தால் கடவுள் தாம் வாக்களித்தப்படியே சாராள் முதிர்ந்த வயதில் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தாள்.

## கடவுள் ஈசாக்கை பலியிட வேண்டல்

ஒருநாள் கடவுள் ஆபிரகாமை சோதிக்கும் பொருட்டு நீ அன்பு கூரும் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக் கொண்டு, மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலையின் மேல் ஈசாக்கை பலியிட வேண்டும் என்று கூறினார். ஆபிரகாம் கடவுளிடத்தில் எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் தாராள உள்ளத்துடன் கொடுக்கக்கூடிய மனவுறுதியைப் பெற்றிருந்தார். இதனை

“மனக்கவலை எதுவுமில்லை மனமுடன் தருவேன் என்றான்

தனக்கன்று இறைவனுக்கே தகுபொருள் எதுவும் என்றான்”

என்ற வரிகளிலிருந்து ஆபிரகாமின் ஆழ்ந்த இறை நம்பிக்கை வெளிப்படுகிறது (Innasi, 2012).

பலியை அறியாதப் புதல்வன்

கடவுளின் கட்டளைப்படி ஆபிரகாம் தான் அதிகம் அன்பு செய்த தன்னுடைய ஒரே மகனான ஈசாக்கின் தோளின் மீது பலிடத் தேவையான விறகு கட்டைகளை சுமத்தினார்: தன்னுடைய கையில் நெருப்பையும் வாளையும் எடுத்துக் கொண்டு மலை சூழ்ந்த மோரியா என்னும் பகுதியை அடைந்தார். ஈசாக் தன் தந்தையிடம் அப்பா தகனப்பலிக்கு வேண்டிய மிருகம் எங்கே என்று கேட்ட போது ஆபிரகாம் தன் மகனிடம் கடவுளே தயார் செய்து தருவார் என்று கூறி பலிபீடம் அமைத்து விறகுகளை அடுக்கி அதன் மேல் தன் மகனின் கை கால்களை கட்டி கிடத்தி, வாளை உருவி ஓங்கும் போது கடவுளின் தூதர் ஒருவர் வானத்தினின்று ஆபிரகாம் என்று கூப்பிட்டு, உன்னுடைய மகனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ தெய்வ பயமுடையவன். உன்னுடைய ஒரே மகனையும் பலிடத் தயங்காதவன் என்பதை இப்போது நாம் அறிந்தோம் என்று கூறினார். அங்கு முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்ட ஓர் ஆட்டுக் கிடாயை பிடித்து தன்னுடைய மகனுக்கு பதிலாக தகனப் பலியாய் ஒப்புக்கொடுத்தார்.

கடவுளின் கட்டளைக்கு முழுமனதுடன் கீழ்படிந்த ஆபிரகாமின் நம்பிக்கைக்கு பரிசாக "நீ வானத்தை அண்ணாந்து பார், கூடுமாயின் விண்மீன்கள் எத்தனையென்று எண்ணிப்பார் உன் சந்ததி அவ்வளவு இருக்கும் என்றார். ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார்". கடவுள் ஆபிரகாமின் வழி மரபினர் தம் பகைவர்களின் வாயிலை உரிமையாக்கிக் கொள்வர் என்றுக் கூறி ஆசீர் வழங்கினார்.

ஆபிரகாம் - ஈசாக்கின் பலியிடு வரலாறு கிளைக்கதையானது, கடவுளுக்கு கீழ்படியும் தந்தையின் உள்ளத்தையும், தந்தைக்கு கீழ்படியும் மகனின் உள்ளத்தையும் நமக்கு உணர்த்துகின்றது. நம்பிக்கை நாயகன் ஆபிரகாமின் வாழ்வு காப்பிய நாயகன் தேவசகாயம் பிள்ளையின் வாழ்வில் ஆழ்ந்த இறை நம்பிக்கையையும், எதையும் தாங்கும் மனவலிமையும் அவர் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றச் செய்தது.

## யாக்கோபின் அன்பு மகன் யோசேப்பு

கானான் நாட்டில் யாக்கோபு என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு பன்னிரண்டு புதல்வர்கள் இருந்தனர். வயது முதிர்ந்த நிலையில் பன்னிரண்டாவது மகனாக யோசேப்பைப் பெற்றதனால் எல்லா மகன்களைக் காட்டிலும் அதிகமாக அன்பு செய்தார். அவரது அன்பினை வெளிப்படுத்தும் விதமாக விலையுயர்ந்த ஆடையினை மகனுக்கு வழங்கினார். இதனால் யாக்கோபின் மற்ற புதல்வர்களுக்குள் யோசேப்பின் மீது பொறாமையும் வெறுப்பும் உண்டானது. யோசேப்பைக் கொல்லுவதற்கு திட்டமிட்டதோடு தக்க சமயத்தையும் தேடிக்கொண்டிருந்தனர்.

## யோசேப்பை விற்றல்

யோசேப்பின் மீது அன்பு கொண்டிருந்த முதல் சகோதரன் ரூபன் யோசேப்பைக் காப்பாற்றும் நோக்கத்தில், அவனைக் கொன்றால் நம்மேல் இரத்தப்பழி வந்து சேரும். அதனால் கொல்லாமல் படுகுழியில் போட்டு விடலாம் என்று தன்னுடைய மற்ற சகோதரர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தனர். அந்நேரத்தில் அந்த வழியாக ஒட்டகத்தில் வந்த மிதியான் நாட்டு வணிகர்களிடம் யோசேப்பை இருபது காசுக்கு விற்றனர். சகோதரர்கள் தந்தையிடம் வெள்ளாட்டுக் கிடாயின் இரத்தம் தோய்க்கப்பட்ட யோசேப்பின் அங்கியைக் காட்டி யோசேப்பு இறந்து விட்டான் என்று பொய்யுரைத்தனர்.

## தந்தையின் புலம்பல்

தனது மகன் யோசேப்பு இறந்து விட்டான் என்ற பொய் செய்தியைக் கேட்ட யாக்கோபு தன் வாழ்க்கையில் அனைத்தையுமே இழந்து விட்டதாக எண்ணிக் கதறி அழுது புலம்பினார்.

"கண்ணிருந்தும் பயனில்லை இனிமேல் எனக்கு

காதிருந்தும் செயலில்லை இனிமேல் எனக்கு" (Innasi, 2012)

என்ற யாக்கோபின் எண்ணக் குமுறலை கவிஞர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பணியில் மேன்மை

சகோதர்களின் சூழ்ச்சி, தந்திரம் இவற்றையெல்லாம் அறிந்த யோசேப்பு அவர்களுக்கு எதிராக எதையும் செய்யாமல் பொறுமையுடன் அமைதியாகத் துன்பங்களை ஏற்றுக்கொண்டார். யோசேப்பு எகிப்தில் வளமான வாழ்வு வாழ்ந்தார். தனது கடின உழைப்பால் யோசேப்பு பார்வோன் மன்னனைக் காக்கும் தலைவனிடம் நற்பெயர் பெற்றார். போத்திபாரின் மனைவி யோசேப்பின் அழகில் மயங்கி தன்னுடன் உறவு கொள்ளுமாறு வேண்டினாள். யோசேப்புக்கு கடவுள் பயம் இருந்ததால் மறுத்து விட்டார், போத்திபாரின் மனைவி அவரின் மீது பொய்க்குற்றச்சாட்டினாள் போத்திபார் யோசேப்பை சிறையில் அடைத்தான்.

## கடவுளின் அருள் யோசேப்பின் மீதிருந்தது

யோசேப்புக்கு சகோதரர்கள் உடன் பணிபுரிந்தவர்கள் இப்படி பலரின் வழியாக பல சோதனைகள் வந்த போதும் மனம் தளரவில்லை. சிறையில் தனக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை மகிழ்ச்சியுடன் செய்து கொண்டிருந்தார். கடவுளின் மட்டில் ஆழ்ந்த நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்த யோசேப்பின் நன்னடத்தையைக் கண்ணுற்ற சிறை மேலாளர் சிறையில் சில பொறுப்புகளை யோசேப்பிடம் ஒப்படைத்தார்.

## சிறைக்காவலன் மன்னனிடம் யோசேப்பைப் பற்றி கூறுதல்

கடவுளின் அருள் யோசேப்பின் மீது இருந்ததால் கனவுகளுக்கு விளக்கம் கூறக்கூடிய ஞானத்தை தந்திருந்தார். எகிப்து மன்னன் பார்வோன் ஒரு கனவு கண்டான். அவனது கனவினை விளக்க ஆட்களின்றித் தவித்த போது மன்னனிடம் சிறைக்காவலன் யோசேப்பு கனவுகளுக்கு துல்லியமாக விளக்கம் கூறுவான் என்று கூறியவுடன் மன்னனின் ஆணைப்படி உடனே சிறையிலிருந்த யோசேப்பை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

## பார்வோனின் கனவுக்கு விளக்கமளித்தல்

எகிப்திய மன்னன் பார்வோன் இரு கனவுகள் கண்டார். முதற்கனவில் ஏழு கொழுத்த பசுக்களை மெலிந்த ஏழு பசுக்கள் விழுங்குவதாகவும், இரண்டாம் கனவில் ஒரே நாளில் தோன்றிய நன்கு முற்றிய ஏழு கதிர்கள் தீய்ந்து, பதாராகிக் கீழை காற்றினால் கருகிப்போன வேறு ஏழு கதிர்கள் விழுங்குவதாகவும் கூறப்பட்டது. இரு கனவுகளுக்கும் யோசேப்பு தகுந்த விளக்கம் கூறினார். அதாவது எகிப்து நாட்டின் வளமான ஏழாண்டுகளுக்குப் பின்வரும் ஏழாண்டுகளில் கடும் பஞ்சம் ஏற்படும். எனவே வளமான ஏழாண்டுகளில் மன்னன் உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டுமென்று யோசேப்பு கனவிற்கு விளக்கமளித்தார்.

## யோசேப்பின் தலைமைப்பண்பு

இளைஞரான யோசேப்பிடம் தலைமைப்பண்பு இருந்ததை உணர்ந்த மன்னன், யோசேப்பை வரவிருக்கும் பஞ்சத்திலிருந்து காக்குமாறு எகிப்தின் ஆளுநராக்கி தனது மகளை யோசேப்புக்கு மணமுடித்து வைத்தான். யோசேப்பை ஆளுநராக்கியதோடு யோசேப்பு அறிவித்தபடி எகிப்தில் ஏழாண்டு கடும் பஞ்சம் நிலவியது. இறையருளுடன் கூடிய யோசேப்பின் முயற்சியால் எகிப்து நாட்டைத் தவிர பிற நாடுகள் பஞ்சத்தில் சிக்கின.

யோசேப்புக்கு எதிராகச் சூழ்ச்சி செய்த சகோதர்கள் பஞ்சத்தின் காரணமாக எகிப்தை வந்தடைந்தனர். யோசேப்பு அவர்களின் சூழ்ச்சியைப் பற்றி எதுவும் நடவாதது போல அவர்களை

வழிநடத்தினார். பல மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு தன்னை இங்கு அழைத்து வந்து கடவுளின் மேன்மையைக் காணச் செய்தார் என்றார்.

இளம் வயதினனான யோசேப்பு தனது வாழ்வில் வயதுக்கு மீறிய புறக்கணிப்புகள், எதிர்ப்பு, செய்யாத குற்றத்துக்குத் தண்டனை இப்படி பல்வேறு விதமான சோதனைகளை தன் வாழ்வில் சந்தித்த போதும் அதில் விழாமல் தெய்வ பயத்தோடு வாழ்ந்ததால் கடவுளின் அருள் அவரின் வாழ்வை மேன்மையடையச் செய்தது. என்பதை இவ்விலியக் கிளைக்கதை வழியாக அறிய முடிகின்றது. இக்கதையின் வழியாக நீலகண்டன் இறைப்பற்றிருந்தால் எச்சோதனையிலும் விழாமல் தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என்று உணர்ந்தார்.

## சாலமோனின் ஞானம்

ஞானம் என்பது மெய்ப்பொருளை உள்ளது உள்ளபடியே அறிவதாகும். தாவீதின் மகனான சாலமோன் இஸ்ரேலின் அரசனானான். அப்போது அவனுக்கு வயது இருபதைக் கூட எட்டவில்லை. அரசனுக்கு உரிய உடல் வலிமையில்லாத போதும் தந்தையின் அறிவுரைகளை மனதில் கொண்டு நல்வழியில் நாட்டை ஆட்சி செய்தார். ஆண்டவரிடம் சாலமோன் பொன், பொருள் கேட்கவில்லை. “உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமையைப் பகுத்தறியவும் வேண்டிய ஞானத்தை அடியேனுக்கு அளித்தருளும் ஏனெனில், கணக்கற்ற இந்த உம் மக்களுக்கு நீதி வழங்க யாரால் முடியும்” என்றார். இறைவனும் நாட்டில் உன்னைப் போல் ஞானம் கொண்டோர் எவருமில்லை என்ற சிறப்பு ஆசீரையும் கேட்காத பல செல்வத்தையும் வழங்கினார். கடவுளிடமிருந்து மனிதன் ஞானத்தைப் பெற அவர் மீது இறையச்சம் கொண்டிருக்க வேண்டும். மனத்தாழ்மையும், அடக்கமில்லாத இடத்தில் தெய்வீக ஞானம் இருக்க முடியாது.

## சாலமோன் சரியான தீர்ப்பளித்தல்

விலைமாதர் இருவர் சாலமோனிடம் நீதி கேட்டு வந்தனர். இரவில் படுத்துத் தூங்கும் போது குழந்தை இறந்து விட்டதாகவும், அதைப் பெண்ணொருத்தி தன்னிடம் போட்டு விட்டு, தன்னுடைய குழந்தையை எடுத்துக்கொண்டு உரிமை கோருவதாக வழக்குத் தொடுத்தனர். சாலமோன் இவ்வழக்கை நன்கு ஆய்ந்த பின்னர் வாளொன்று கொண்டு வருமாறு ஆணையிட்டார். வாளைக் கொண்டு குழந்தையை இரண்டாகக் பிளந்து பங்கிட்டுக் கொடுக்குமாறு கூறினார். இரண்டாகக் குழந்தையை வெட்டுவதற்கு முன் உண்மைத்தாய் தடுத்து நிறுத்தினாள். பிள்ளையை வெட்ட வேண்டாம் யாரிடமாவது பிள்ளை வாழ்ந்தால் போதும் என்று கூறினாள். இதிலிருந்து பிள்ளையின் வாழ்வை உயர்வாகக் கருதியவளே உண்மையான தாய் என்று சாலமோன் நீதி வழங்கினார்.

தெய்வ பயமே ஞானத்தின் தொடக்கம். ஞானத்தை அளிப்பவர் கடவுள் என்பதும், அதை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்பவன் மனிதன் என்பதையும் இக்கிளைக்கதை வழியாக அறிய முடிகிறது. நீலகண்டன் இக்கதை வழியாக தெய்வ நம்பிக்கை உடையோர் கடவுளிடம் கேட்பதை எளிதாகப் பெற முடியும் என்பதை அறிந்தார் (Holy Bible, 1995).

## தளபதி டிலனாய்

டிலனாய் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவர். டச்சுப் படையில் போர்ப் பயிற்சிப் பெற்று ஜெனரலாகப் பணியாற்றினார். இவர் 1741- ல் திருவிதாங்கூர் நாட்டை எதிர்த்து குளச்சல் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் தோல்வியுற்றதால் இருபத்து மூன்று வீரர்களுடன் மன்னன் மார்த்தாண்டவர்மனிடம் சரணடைந்தார். மார்த்தாண்டவர்மன் தனது படையை வலுப்படுத்த எண்ணி டிலனாயைக் கொண்டு படையை வலிமைப்படுத்தினார். டிலனாயும் நீலகண்டனும் இணைந்து பணியாற்றினர். அவ்வமயம் இருவரும் நண்பர்களாயினர். கிறித்தவ திருமறையைப் பற்றி

நீலகண்டனுக்கு எடுத்துச் சொன்னவர் இவரே. அவரின் உதவியால் திருமுழுக்குப் பெற்று தனது பெயரை தேவசகாயப்பிள்ளை என்று மாற்றிக்கொண்டார்.

## நீலகண்டன் குடும்பத்தில் துன்பங்கள்

இக்காப்பியத்தின் தலைமை மாந்தராக விளங்கும் நீலகண்டன் அரசாங்க வேலையில் உயர் பதவி வகித்தவர். "நீலகண்டப்பிள்ளையும் டிலனாயும் ஒருவருக்கொருவர் நண்பர்களைப் போன்று அறிவுரை கூறியும், அறிவுரை கேட்டும் உடன் பிறப்பு போன்று உறவாடியும் அரசுப் பணியின் பொறுப்புகளை ஆராய்ந்து செயலாற்றி வந்தார்கள்." (Muthukumaru, 1974)

ஒரு நாள் பெரும் செல்வரான நீலகண்டபிள்ளையின் மாடு, கன்றுகள், இறந்தன. விவசாயத்தில் நஷ்டங்கள் ஏற்பட்டன. குடும்பத்தில் பலர் இறந்தனர். தேவியின் கோபம் என்று நீலனின் குடும்பத்தினர் எண்ணி பல பூசை, பரிகாரங்கள் செய்தனர். இதனால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. நீலகண்டப் பிள்ளையும் பெருங்கவலையுடன் காணப்பட்டார். நீலனின் கவலைக்கான காரணத்தை டிலனாய் கேட்டு அவரது வேதனையை உணர்ந்து அனைத்து துன்பத்திற்கும் இயேசுவின் திருவடிகள் துணை என்று ஆறுதல் கூறினார். இதனை,

"இன்னவகைத் துன்பமெலாம் இரிந்தே ஓட

இயேசு பிரான் திருவடிகள் துணையாம்" (Innasi, 2012)

என்ற வரிகள் மூலம் அறியலாம். மேலும் டிலனாய் விவிலியத்தில் இடம் பெற்றுள்ள யோபுவின் வாழ்வில் ஏற்பட்ட துன்பத்தை எடுத்துக் கூறினார்.

## சோதனைகளை வென்ற யோபு

'ஊஸ்' என்னும் நாட்டில் யோபு என்பவர் வாழ்ந்தார். அவர் நீதிமான் நேர்மையாளர் அவருக்கென்று அதிகமான செல்வங்கள் இருந்தன. ஏழு மகன்களும், மூன்று மகள்களும் இருந்தனர். ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளும் இருந்தன. இதனைப் பராமரிக்க வேலைக்காரர்கள் பலர் இருந்தனர். கடவுளுக்கு அஞ்சி, தீயதை விலக்கி நீதிமானாக வாழ்ந்தார். இந்நிலையில் அலகையானது யோபுவைச் சோதித்ததன் விளைவாக யோபுவின் வெல்வங்கள் எல்லாம் அழிந்தன. இந்த நிலையிலும் யோபு இறைவனைப் பழிக்கவில்லை. மாறாக தன்னையே பழித்துக் கொண்டார்.

## யோபுவின் ஆழ்ந்த இறைப்பற்று

யோபுவின் வாழ்வில் நாளுக்கு நாள் துன்பங்கள் பெருகிக்கொண்டே சென்றன. பொருள்களை இழந்ததோடு யோபுவின் உச்சி முதல் உள்ளங்கால் வரை அருவருப்புக்குரிய புண்கள் ஏற்பட்டன. இத்தகைய கொடுமையான சூழ்நிலையிலும் இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையில் சிறிதளவும் தளரவில்லை. யோபுவின் இறைப்பற்றைப் பார்த்த அவரது மனைவி கடவுளைப் பழித்ததோடு செத்துத் தொலையக் கூடாதா என்று தன் கணவனைத் திட்டினாள். அப்போது யோபு நன்மையைக் கடவுடமிருந்து பெற்ற நாம் ஏன் தீமையைப் பெறக்கூடாது? என்று கூறி "நிருவாணியாய் என் தாய் வயிற்றிலிருந்து வெளிப்பட்டேன். நிருவாணியாகவே திரும்பிப் போவேன் ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார் ஆண்டவரின் திருப்பெயர் வாழ்த்தப்பெறுக" என்று கூறி இறைவனை வாழ்த்தினார்.

## யோபுவின் விசுவாச வாழ்வுக்கு கிடைத்த பரிசு

யோபுவின் ஆழமான விசுவாச வாழ்வுக்கு கடவுள் கொடுத்த பரிசு இழந்த செல்வங்கள் அனைத்தையும் இரு மடங்காகத் திரும்பத் தந்தார். நான்காம் தலைமுறை பிள்ளைகளைக் காணும்

ஆசீர் பெற்று முதுமையில் இறைவனடி சேர்ந்தார். என்று யோபுவின் வாழ்வைப் பற்றி துன்பத்தில் வேதனையுற்று இருந்த இக்காப்பியத்தின் முதன்மைப் பாத்திரமாக விளங்கும் நீலனுக்கு டிலனாய் எடுத்துக் கூறினார். இதனைக் கேட்ட நீலனின் வாழ்விலும் ஆழமான இறைநம்பிக்கை உருவானது.

## நீலனின் வாழ்வில் இறைப்பற்று

நீலன் துன்பங்களில் துவண்டு சோர்ந்து போகாமல் இறைவன் மட்டில் ஆழமான இறைப்பற்றுக் கொண்டு வாழ அவரின் விசுவாச வாழ்வுக்கு வித்திட்டவர் டிலனாய். கடவுளின் மேல் யோபு கொண்டிருந்த பேரன்பை டிலனாய் நீலனுக்கு எடுத்துரைத்தார். இயேசுவின் மீது தணியாத தாகம் கொண்டவராய் அவரின் பொருட்டு அரசுபணி, மனைவி, அரசனிடத்தில் தனக்கிருந்த செல்வாக்கு அனைத்தையும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பதற்கு துணிந்தார். இயேசுவின் பாடுகளை தன் வாழ்வில் விரும்பி ஏற்று வாழ்ந்தவர்.

நீலன் இயேசுவை பெயர் அளவில் ஏற்றுக்கொண்டவர் அல்ல. கத்தோலிக்க கிறித்துவத்தில் திருமுழுக்குப் பெற்று தனது பெயரை 'தேவசகாயம் பிள்ளை' என்று மாற்றிக் கொண்டு இயேசுவின் போதனைகளை முழுமையாக ஏற்று கடைபிடித்து வாழ்ந்த இறைமனிதர். கிறித்துவ மதத்தை தழுவியதால் மன்னனின் கடுங்கோபத்துக்கு ஆளாகி இயேசுவைப் போல் பல அவமானங்களையும், வேதனைகளையும், சித்திரவதைகளையும், தண்டனைகளையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு அனுபவித்தவர். அந்த வேதனைகளில் எந்தவித புலம்பலுமின்றி பெரும் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவர். கடவுள் அவரின் விசுவாச வாழ்வின் பொருட்டு வாழும் போதே அவரில் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அவர் தன்னுடைய இன்னுயிரை கிறிஸ்துவின் பொருட்டு துறந்தார்.

## முடிவுரை

இவ்வுலகை விட்டு மறைந்து இருநூறு ஆண்டுகள் கடந்து கடந்த மே மாதம் அவரை திருஅவை 'புனிதர்' நிலைக்கு உயர்த்தியுள்ளது. கடவுள் மதங்களை கடந்தவர். அவரில் ஆழமான அன்புடையவர்களின் வாழ்வில் துன்பங்களை அனுமதிப்பார் அதை மகிழ்வோடு ஏற்று வாழ்பவர்களுக்கு அவரின் மாட்சிமையில் பங்கு தருவார். என்பதற்கு சிறந்த சான்றாக புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட தேவசகாயப்பிள்ளைப் போன்று நாமும் இன்பம் துன்பம், வெற்றி தோல்வி, போன்ற எச்சூழ்நிலையிலும் கடவுளை விட்டு விலகாமல் இறைவனை மட்டும் சிக்கென்று பிடித்துக் கொண்டால் இறையருள் நம்மையும் நம் வாழ்வையும் ஆசீர்வாதமாக வழிநடத்தும். இறைவனை இறுக பற்றிக் கொண்டு புனிதவாழ்வு வாழ முயல்வோம்.

## References

Duraisamy Pillai, A.S. (1941) Seevaga Sinthamani Araichi, The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd, Tirunelveli, India

Holy Bible, (1995) Tamilnadu Bibilcal, Catechetical & Liturgical Centre, Tindivanam, India,

Innasi, S. (2012) Thiruthondar Kappiyam, Kavya Pathippagam, Chennai, India

Muthukumaru, (1974), Devasahayam Pillai Nattukoothu, Aarali veliyedu, Jaffna, Sri lanka.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License